மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் இதே கோரிக்கையை நாம் வைத்திருக்கிறோம். மீண்டும் வலியுறுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட ஹாஸ்பிட்டலாக தரம் உயர்த்துவதைப் போலவே, அதே மாதிரி திட்டத்தினை துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதையும் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலேயிருந்து, அந்தந்தப் பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்ன நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த இடம் இருக்குமேயானால், அங்கே நிதிநிலையைக் கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப்படும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அந்த துணை சுகாதார நிலையங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றம் செய்கிறபோது, இதே நிபந்தனைக்கு, இதே இலக்கிற்கு உட்பட்டு அந்தப் பகுதி இருக்குமேயானால், அந்த இடம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 38, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

38—

பேருந்து நிலையம்

***2784—திரு. வெ. கோவிந்தராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002 மார்ச் 28]

கிருஷ்ணகிரி நகரத்தில் நிரந்தர பேருந்து நிலையம் இல்லாததால் புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி நகராட்சி, கட்டிகானப்பள்ளி கிராமம் சர்வே எண் 42/1-ல் அமைந்துள்ள அப்புராவ் ஏரியில் 16.10 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நகராட்சிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கிருஷ்ணகிரி நகரம் வளர்ந்து வருகின்ற நகரமாகும். மாவட்ட அந்தஸ்திலே இருக்கின்ற அந்த நகரத்திலே உள்ள மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த அந்தப் பேருந்து நிலையம், இந்த ஆண்டு கிருஷ்ணகிரியிலே நிறுவப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலே அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, பணி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதேநேரத்திலே, கிருஷ்ணகிரி நகரத்திலே நிரந்தர பேருந்து நிலையம் அமைய ஆணையிட்ட, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாய்ப்பிற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டு, பேருந்து நிலையம் அமைக்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் பேருந்து நிலையம் அமைக்க ரூ. 4.10 கோடி கடன் தொகையை அளிக்கக் கோரி, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்திடம் கோரப்பட்டுள்ளது. கடன் தொகை பெறப்பட்டவுடன், பேருந்து நிலையம் கட்ட நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திரு. அ. நடராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.